**கொழும்புப் பல்கலைக்கழகம் - இலங்கை**

**கலைப்பீடம்**

**இரண்டாம் வருடக் கலைமாணிப் பரீட்சை – பருவம் I – 2017/2018**

**PSC 2125 – தெற்காசிய அரசுகளின் அரசியல்**

**நேரம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்**

**மூன்று (03)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.
ஒவ்வொரு விடையும் ஆகக்கூடியதாக **இருபது (20)** புள்ளிகளைக் கொண்டிருக்கும்.

---

01. (i) தெற்காசியாவின் புவிசார்-அரசியலின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விளக்குக.

    (ii) தெற்காசிய நாடுகள் மீதான ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனாவின் புவிசார்-அரசியல் செல்வாக்கினை ஒப்பீட்டு ரீதியாக பகுப்பாய்வு செய்க.

02. **ஒன்றில்**

    (i) 1979 க்கு பின்னரான ஆப்கானிஸ்தானின் சனநாயக நெருக்கடி தொடர்பில் கலந்துரையாடுக.

    **அல்லது**

    (ii) தெற்காசியாவில் தேசத்தை கட்டியெழுப்புதலில் காணப்படும் முக்கியமான பண்புகளை உதாரணங்களுடன் விளக்குக.

03. மாலைதீவின் சனநாயகமயப்படுத்தலிற்கான அரசியல், பொருளாதார மற்றும் சமூக ரீதியான சவால்களை பரீட்சிக்குக.

04. பாக்கிஸ்தானில் சனநாயக ஆட்சிக்கு தடை ஏற்படுத்துகின்ற வரலாற்று மற்றும் சமகால பிரச்சினைகளை விளக்குக.

05. இந்தியாவினது மத மற்றும் மொழி ரீதியான பன்மைத்துவத்தினை உள்வாங்கிக் கொள்வதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட மூலோபாயங்களை நுணுக்கமாக மதிப்பீடு செய்க.

06. பூட்டானின் சனநாயக நிலைமாற்றத்தில் வான்-சக் அரச பரம்பரையினரது (Wan-chuck Dynasty) வகிபங்கினை பரீட்சிக்குக.

(P.T.O)

07. பின்வருவனவற்றில் **இரண்டு (02)** பற்றி குறிப்புக்கள் எழுதுக:

(i) இலங்கையில் மதம் மற்றும் அரசியலுக்கு இடையிலான தொடர்பு.

(ii) பாக்கிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தான் அரசுகளுக்கு இடையிலான தொடர்பு.

(iii) பிராந்திய வல்லரசாக தெற்காசியாவில் இந்தியாவின் தலையீடு.

(iv) தெற்காசியாவில் எதிர்பார்க்கப்படும் அரசியல் சவால்கள்.

*************************